உ
சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. No. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண வூ சித்திரை மீ ககூஉ (1944 மெமீ 1 திங்கட்கிழமை) [இல. எ

## "பிரிய அனுமதிப்பதே ஒற்றுமைக்கு அறிகுறி"

### "இந்தியாவின் ஐக்கியம்" பற்றி ராஜாஜியின் சொற்பொழிவு

நகர மண்டபத்தில் வரவேற் புபசாரம்

"பிரிவதனால் இந்தியாவின் ஒற்றுமை குலையுமென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் பிரியவேண்டுமென்று விரும்பும் பட்சத்தில் முஸ்லிம்களைப் பிரிந்துபோக அனுமதிப்பதனால்தான் இந்தியாவில் உண்மையான ஒற்றுமை ஏற்படும்" என்று நேற்று மாலை 'வை. எம். ஸி. ஏ.' மண்டபத்தில் டாக்டர் ஸி. ராஜகோபாலாச்சாரியர் பேசுகையில் கூறினார்.

டாக்டர் ஸீ. ராஜகோபாலாச்சாரியார் வெள்ளிக்கிழமை பிற்பகல் விமானத்தில் வந்திறங்கியதும் அவருக்கு நகரமண்டபத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. அதன்பிறகு அவர் 'வை. எம். ஸி. ஏ.' யில் இந்தியாவின் ஐக்கியம் என்னும் விஷயம்பற்றிப் பேசுகையில்தான் மேற்கண்டவாறு கூறினார். கூட்டத்துக்கு ராஜாஸேர். அண்ணாமலைச்செட்டியாரும் வேறு பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

ஆரம்பத்தில் அவர் இந்தியாவின் கலாசார ஒற்றுமையைப் பற்றிக் குறிப்பிடுகையில் வெளித்தோற்றத்துக்கு அங்கு கலாசார வேற்றுமை இருப்பதுபோல் தோன்றினும் உண்மையிலேயே அங்கு கலாசார ஒற்றுமை இருந்து வருவதாகக் கூறினார்.

#### ஒற்றுமைக்கு மதம் தடையல்ல

தொடர்ந்தவர் பேசுகையில் இந்தியாவின் ஒற்றுமைக்கு மதவேற்றுமைகள் தடையாக இல்லையென்றும், ஆதலின் ஒற்றுமைக்கு மதம் தடையாக இருப்பதென்று கூறுவது தவறென்றும் குறிப்பிட்டுவிட்டுப் பாகிஸ்தானைத் தாம் ஏன் ஆதரிப்பதென்பதை விளக்கிக் காட்டினார்.

'நாங்கள் பிரிந்துவிடவேண்டும்' என்று விரும்பும் முஸ்லிம்களைப் பிரியவிடாது வைத்திருப்பதனால் இந்தியாவில் ஒற்றுமை ஏற்படுகிறதில்லை. குடும்பங்கள் பெரிதாக இருக்கும்பட்சத்தில் அவற்றின் சொத்துக்கள் பங்கிடப்படுவதுபோல் இந்தியாவும் பிரிக்கப்படத்தான் வேண்டும். பிரிந்து செல்ல முஸ்லிம்கள் விரும்பினால் அவர்களுக்கு அந்த உரிமையை வழங்குவதனாலேயே அங்கு உண்மையான ஒற்றுமை ஏற்பட முடியும். இதுதான் நான் ஜனாப். ஜின்னாவின் பாகிஸ்தான கோரிக்கையை ஆதரிப்பதற்குக் காரணம் என்று கூறி முடித்தார்.

#### நகர மண்டபத்தில்

டாக்டர் ராஜகோபாலாச்சாரியார் நகரசபை ஸ்தலத்தில் பிரவேசிக்கும்பொழுது ஹரிஜனச் சிறுவர்கள் கறுப்புக் கொடிகளைக் காட்டினார்கள். அவர்களிற் சிலர் கறுப்புக் கொடிகளை அவர் சென்ற கார் மீது வீசினார்கள். பொலிஸார் உடனே கொடிகளை அவர்களிடமிருந்து பறித்துவிட்டனர்.

ராஜாஜி பேச்சைக் கேட்பதற்கு நகர மண்டபத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அங்கு இடமின்மை காரணமாக மண்டபத்துக்கு வெளியிலும் திரளான ஜனங்கள் நின்றனர்.

இலங்கை-இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. அஸீஸ் கூட்டத்துக்குத் தலைமை வகித்து விருந்ினரை வரவேற்றார்.

சேர். இரத்தினஜோதி சரவணமுத்து அடுத்தபடியாக ராஜாஜியை வரவேற்றார். திரு. ஸ்ரீபால சமரக்கொடி இலங்கைத் தேசியக்காங்கிரஸின் தலைவர் என்ற முறையில் அவருக்கு வரவேற்பு அளிக்கையில் சுதந்திர இந்தியாவைக் கொண்டுதான் சுதந்திர இலங்கை ஏற்படவேண்டுமென்றும் ராஜாஜியின் விஜயம் இரு நாடுகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் களைவதற்கு உதவுமென்றுங் குறிப்பிட்டார்.

திரு. டி. பி. ஜயா, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் பேசியபின்னர் ரூபா 2235 கொண்ட பணமுடிப்பு ஒன்று சிந்தி வர்த்தகர் சங்கத்தாரால் அளிக்கப்பட்ட கஸ்தூரிபாய் ஞாபகார்த்த நிதிக்கு ராஜாஜியிடம் கொடுக்கப்பட்டது.

#### ராஜாஜி பிரசங்கம்

ராஜாஜி தம்மை வரவேற்றுப் பேசியவர்களுக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் இலங்கைசுயேச்சையை விரும்பினால் இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் சுதந்திர உணர்ச்சியுடையவர்களாகித் தமது சுதந்திரத்தில் ஒரு பகுதியைப் பொதுவான இலட்சியத்துக்குக் கொடுக்கவேண்டுமென்றுங் கூறினார்.

#### கறுப்புக் கொடிக்காரர்களுக்குப் பதில்

மேலும் அவர் பேசுகையில் காங்கிரஸிலிருந்து தாம் விலகியதைக் குறிப்பிட்டுவிட்டு, தமக்குக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றதற்கான காரணத்தைக் கூறினார். தென்னிந்தியாவில் தமது சமூகத்தினரிடையே பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும் ஹரிஜனங்கள் வழிபாடு செய்வதற்கு ஆலயங்களைத் திறந்துவிடுவது சம்பந்தமாகத் தாம் செய்த காரியங்களை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லையென்றும் அப்பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தாம் கையாண்ட முறை திவான்பகதூர் எம். ஸி. ராஜாவின் முறையைவிட வேறுபட்டதென்றும் கூறி அதை விளக்கினார்.

## "ஹிட்லர் யுத்தத்தில் தோற்றுவிட்டார்"

### ஹெஸ் உட்பட ஜேர்மன் ஜெனரல்களின் அபிப்பிராயம்

லண்டன் ஏப் 28—

இங்கிலாந்தில் இப்போது கைதியாக இருந்துவரும் ருடோல்ப் ஹெஸ்ஸும் ஏனைய ஜெர்மன் ஜெனரல்களிற் பெரும்பாலோரும் இந்த யுத்தத்தில் ஹிட்லர் தோற்றுவிட்டாரென்பதை ஒத்துக்கொள்கின்றனரென்று "டெயிலி ஸ்கெச்" பத்திரிகையின் நிருபர் கூறுகிறார்.

'ருடோல்ப் ஹெஸ்ஸிடம் இதற்கு முன்னிருந்த பிடிவாத குணமும் வைராக்கியமும் இப்போது மறைந்துவிட்டன. பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையத்தின் செய்திகளைக் கேட்கும்போது "எல்லாம் பொய்" என்று இதற்கு முன் அவர் கூறிவந்தார். இப்போதோ எனில் அவர் உண்மையைத் தாழ்மையோடு ஒப்புக்கொள்கிறார் என்று நிருபர் கூறுகிறார்.

ஹெஸ் மற்றும் 20 ஜெர்மன் ஜெனரல்களையும் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவர்கள் இவரோடு ஒரு வார்த்தையாவது பேசுவதில்லை. பிரஷ்ய ஜெனரல்கள் இவரை ஒரு சாதாரண ஸிவிலியனாகவே மதிக்கின்றனர்.

பிரஷ்ய ஜெனரல்கள் பவேரிய ஜெனரல்களுடனே அல்லது ஸாக்ஸனிய ஜெனரல்களுடனே எவ்விதத்திலும் கலப்பதில்லை. பிரஷ்ய ஜெனரல்கள் எப்போதும்போலவே பிடிவாதத்தோடும் வைராக்கியத்தோடுமே காணப்படுகின்றனர். இந்த யுத்தத்தில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டால் அடுத்த யுத்தத்தை வெல்வோம் என்பதாக அவர்கள் பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

ஆபிரிக்கப் படைகளின் பழைய தாகர்த்தரான ஜெனரல் ரிட்டர் வான் தோமா உட்பட எல்லாப் பெரிய ஜெனரல்களும் பிரஷ்யர்களை விட்டு விலகியிருக்கவே விரும்புகிறார்கள். பிருத்தானிய அதிகாரிகள் ஜெனரல் தோமாவை விரும்புகின்றது மாத்திரமன்றி அவரை நன்கு மதிக்கின்றனர்.

ஜெர்மனி இந்தயுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டுவிட்டதென்று அவர் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறார்.

## இலங்கையின் றப்பர் உற்பத்தி

### சென்ற ஆண்டு மிக அதிகமாம்

லண்டன் ஏப் 26—

சென்ற 1943-ம் வருடத்தில் அதற்கு முந்திய வருடங்களைவிட இலங்கை அதிகப்படியான றப்பரை உற்பத்தி செய்ததாகக் குடியேற்றநாட்டு மந்திரி கொம்மன்ஸ் சபையில் கேள்விக்குப் பதில அளிக்கையில் தெரிவித்தார். புள்ளி விவரங்களை வெளியிடுவது சாத்தியமில்லையெனவும் அவர் கூறினார்.

## சாம்ராஜ்ய மகாநாடு

### இந்தியாவுக்காக 3 பிரதிநிதிகள்

லண்டன் ஏப் 26

இராணுவத்தில் சேர்ந்திருப்பவர்களின் சம்பளத்தையும் குடும்ப அலவன்ஸையும் அதிகரிக்க அரசாங்கத்தார் முடிவு செய்திருப்பதாகப் பிரதமமந்திரி மிஸ்டர். சர்ச்சில் இன்று கொம்மன்ஸ் சபையில் அறிவித்தார்.

சமீபத்தில் நடைபெறப் போகும் சாம்ராஜ்ய மகாநாட்டில இந்தியாவின் பிரதிநிதிகளாக இந்தியா மந்திரி மாதிரியின் சேர். பெரோஸ்கான் நூன் காஷ்மீர் ராஜா ஆகிய இருவரும் பங்குபற்றிக் கொள்வரென்றும் பிரதம மந்திரி அறிவித்தார்.

கேள்வி நேரத்தில் பிரதமமந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கிரேக்க கடற்படையிற் சமீபத்தில் ஏற்பட்ட கலகம் பூரணமாக அடக்கப்பட்டு விட்டதாகக் கூறினார். இந்தக் கலகத்தில் ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கொலைப்பட்டாரென்றும் அவர் தெரிவித்து விட்டு அரசியல் வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக, அரசர் பிரதிநிதித்துவங் கொண்ட அரசாங்கமொன்றை அமைக்கத் தமக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறாரென்றும் கிரேக்க மன்னருக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முழு ஆதரவும் கொடுப்பரென்றும் கூறினார்.

## 'இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்'

### விவாக தினத்தில் 8 வயதுச் சிறுமியின் முழக்கம்

புதுடில்லி ஏப் 21

கலியாணத்திற்கு ஏற்பாடுகள் முறுக்காக நடந்தன. கலியாண தினமும் வந்தது. மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் மேளவாத்தியங்களுடன் பெண்வீட்டிற்கு வந்தார்கள். ஆனால்: "இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்" என்று சொல்லித் தனது பெற்றோர் பார்த்திருந்த மாப்பிள்ளையை நிராகரித்தாள் ஒரு 8 வயதுச் சிறுமி. இதனால் கலியாணம் நின்றுவிட்டது. இத்தகைய ஒரு அதிசய சம்பவம் ஜோய்வரா என்னும் இடத்தில் நிகழ்ந்தது நேற்றிரவில்.

பெண்வீட்டின் வாயிலில் மாப்பிள்ளை வீட்டுக்காரர் காத்திருந்தார்கள். கலியாணத்திற்குப் பெண் சம்மதிக்கவில்லையென்று அவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. ஆனால், அந்த விடாக்கண்டர்கள் திரும்புவதாயில்லை. நாங்கள் வெறுங்கையுடன் திரும்ப மாட்டோம், பெண்ணை எங்களுடன் அனுப்பவேண்டும்' என்று கட்டாயப் படுத்தினார்கள். பெண்ணின் சம்மதத்திற்கு விரோதமாகக் கலியாணஞ் செய்துவைக்க அவர்களுடைய சிறியதந்தைக்கு இஷ்டமில்லை. ஆனால், மாப்பிள்ளை வீட்டுக்காரர்களோ விடுவதாயில்லை. ஆகவே, அவர்கள் அப்புறப்படுத்துவதற்குப் பொலிஸ் உதவி அனுப்புமாறு பெண்ணின் சிறியதந்தை நீதிபதியைக் கேட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹூ
சித்திரைமீ ௧௮௨ திங்கட்கிழமை


## அகில இலங்கைச் சைவ மகாநாடு

சென்ற மூன்று நாட்களும் நடந்துள்ள மகாநாட்டின் விபரங்களையும் அம் மகாநாட்டிற் பேசப்பட்ட வரவேற்புரை, தலைமைப் பேருரை என்னு மிவைகளையும் இற்றைப் பிரசுரத்தில் வெளியிட்டுள்ளேம். ஏனைய உபந்நியாசங்களும் நாளடைவில் வெளியாகும். இப்படி வெளியிடுதலால், அந்நாட்களிற் சமுகமாயிராதவர்கட்கும் பயனுண்டாகும்.

மகாநாட்டுத் தலைவராக அழைக்கப்பட்ட சைவத் திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை யவர்கள் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மார்க்கத்திலே பிரயாணச் சிரமத்தினால் உடல்நலனற்றுப் பின்னொருவாறு சுகமடைந்தன ரென்பதை நாம் அறிவேம்; இதனால் அவர்கள் தாம் குறித்துவந்த அளவிற்கு இச் சைவத் தொண்டினை ஆற்றுதலும், இங்கு இன்னுஞ் சில நாள் தங்கி நின்று அயலூரிலுள்ளோர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்று அரிய பிரசங்கங்களைச் செய்தலும் இயலாதாயின; ஆயினும் பிள்ளையவர்களின் உள்ளத்திற் குடிகொண்டுள்ள சமயாபிமானமும், சிவபத்தித் திறனும், நாவலரவர்கள்மீது கொண்டுள்ளதாகிய குருபத்தியும், மேலான நோக்கங்களும் காலகதியிற் சைவநன் மக்களுக்குப் பயனளிக்கும் இயல்பினவாகும்.

இம் மகாநாட்டிற் பேசுதற்கு உடன்பட்டுள்ளோருட் பலர் குறித்த குறித்த நேரத்தில் வந்து தாம் பேச வேண்டியவற்றைப் பேசினூர்கள்; தமக்கு நேர்ந்த அசந்தர்ப்பங் காரணமாகச் சமுகஞ்செய்ய முடியாதவர்களாகிய சிலர் தாம் பேசும்படி எடுத்துக்கொண்ட விஷயத்தை எழுதி அனுப்ப, அவை மகாநாட்டிற் படிக்கப்பட்டன; சிலர் தாம் எழுதிக் கொண்டுவந்த குறிப்பை ஆதாரமாக வைத்துப் பிரசங்கங்கள் செய்தார்கள்; தமக்கு நேர்ந்த அசந்தர்ப்பங் காரணமாக, சிலரினுஞ் சிலர் வாராதொழிய, அங்ஙனம் வாராதொழிந்தவருக்குப் பிரதியாளராக இன்னொருவரை உடனுக்குடன் பேச நியமித்து, அவர் பேசுதற்கு அவரையே ஒரு விஷயத்தை உடனே தெரிந்தெடுத்துச் சொற்பொழிவு நிகழ்த்துவதாகிய ஒழுங்குஞ் செய்யப்பட்டு நிறைவேறியது; இப்படியான நவீன ஒழுங்கு, விஷயத்தைப் பேசிய அவருக்கும் அவர் பேசக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும் அதிக சிரமத்தை விளைத்ததென அவையிலிருந்தோருட் சிலர் சொல்ல நாம் நேரிற் கேட்டுள்ளேம். இப்படியான ஏற்பாடு தவிர்க்கற்பாலது.

பரிசுபெற்ற பிள்ளைகள் ஓதிய தேவாரமுறையும், செய்த மனனச் சொற்பொழிவும் சாலவும் பாராட்டற்பாலன. இம் மகாநாடுபோன்ற சற்கருமங்கட்கு நேரக்கூடிய வசதியீனங்களெல்லாம் நேர்ந்துள்ள இக் காலத்திலே இச் சைவ மகாநாடு ஒருவாறு இடையூறின்றிப் பூர்த்தியடைந்தமையையிட்டு, இதில் ஈடுபட்டுழைத்த காரியஸ்தர்களின் ஊக்கத்தையும் சிவ தொண்டின் உறைப்பையும் பாராட்டுகின்றேம்.

# அகில இலங்கைச் சைவமகாநாட்டு நிகழ்ச்சிகள்

## தலைவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்



சைவத் திருவாளர்:
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்.

அகில இலங்கைச் சைவமகாநாடு இவ்வாண்டு சித்திரைத் திங்கள் ௧௫, ௧௬, ௧௭-ந் நாட்களாகிய (28, 29, 30-4-44) சென்றவெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருமயிலை சைவத் திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை யவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை யன்று காலை 11 மணியளவில் தலைவர் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலிருந்து மகாநாடு நடைபெற்ற மண்டபமாகிய இந்துக்கல்லூரித் தமிழ்ப்பாடசாலை மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அன்று காலையில் தலைவர், திரு. இ. சிவகுருநாதர் அவர்களால் வரவேற்கப்பட்ட பின், தமது தலைமையுரையை வாசித்தார். உடல் நலம் போதிய அளவு இல்லாமையே தலைவர் அவ்வுரையைப் பிறரைக்கொண்டு வாசிப்பித்தமைக்குக் காரணமாகும். அத்தலைமையுரையையும் அவரை வரவேற்றதிரு. இ. சிவகுருநாதரவர்களுடைய வரவேற்புரையையும் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் காண்க.

அன்று பிற்பகலில் 'ஆதித் தமிழனும் அவன்கண்ட அழகுத் தெய்வமும்' என்னும் பொருள்பற்றிப் பண்டிதை ஸ்ரீமதி. இ. பத்மாசனி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை படிக்கப்பட்டது. அதன்பின், சென்ற வருடச் சைவமகாநாட்டு வரவேற்புத் தலைவராயிருந்தவரும் தமிழ்மொழி ஆதியனவற்றில் அபிமானங்கொண்டு உழைத்தவருமாகிய காலஞ்சென்ற திரு. கா. அருளம்பலமவர்களின் பிரிவையிட்டு ஓர் அநுதாபத் தீர்மானம் நிறைவேறியது. அடுத்ததாக, பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையவர்களாலும், திரு. வே. தா. சி. சிவகுருநாதன் அவர்களாலும் "கற்றதனாலாய பயனென் கொல்" என்னும் விஷயமாகவும் 'எங்கள் தற்காலநிலை' என்பதுபற்றியும் இருசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. அவற்றோடு அன்றைய நிகழ்ச்சிகள் பூர்த்தியாயின.

அடுத்த நாளாகிய சனிக்கிழமை காலை 11 மணியளவில், "பெண்களும் சமய வாழ்க்கையும்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமதி. க. அருந்தவநாயகியாலும், "ஆலய வழிபாடு" என்னும் பொருள்பற்றி ஏழாலை சைவத்திருவாளர் ஐ. பொன்னையா அவர்களாலும் உற்சாகம் வாய்ந்த இரு சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அன்று பிற்பகல் வழக்கத்திலும் அதிகமான ஜனத்திரள் மண்டபத்திற் காணப்பட்டது. பின் வருந் தீர்மானங்கள் சபையோரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

(1) ஒவ்வொரு மாணவனுக்கும் தகுந்த கல்வி இலவசமாய் ஊட்டப்படல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பிள்ளையுந் தம் சமயபாடங்களைத் தகுந்த முறையிற் கற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்கவேண்டும்.

(3) சைவப் பள்ளிக்கூடமாயினும், அரசினர் பள்ளிக்கூடமாயினும் ஒரு பாலனுடைய வீட்டிலிருந்து இரண்டு மைலுக்குள்ளிருந்தால் அம்மாணாக்கனைப் புறச் சமயப் பள்ளிக்கூடங்களாகிய தமது பள்ளிக்கூடங்களிற் சேர்க்கக் கூடாது.

இத்தீர்மானங்கள்பற்றித் திருவாளர்கள் வி. வீரசிங்கம் B. A., ச. ஜெயவீரசிங்கம் B. A., க. ஐயாத்துரை, ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை ஆகியோர் பேசினர்.

இதன்பின், 'சேக்கிழாரும் மெய்ப்பாடும்' என்னும் அரிய விஷயம்பற்றிப் பண்டிதர் திரு. க. கி. நடராஜன் அவர்கள் ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினூர்.

அடுத்ததாகத் தலைவரவர்களுடைய 'எனது சமய குரு' என்னும் விஷயம் பற்றிய சொற்பொழிவு நடைபெற்றது. இவற்றோடு சனிக்கிழமை நிகழ்ச்சிகள் நிறைவேறின.

அடுத்தநாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10 மணி தொடக்கம் 'மனோலயம்' என்னும் பொருள்பற்றித் திரு. வே. கந்தையா அவர்களாலும், 'இருபாவிருபஃது' என்னும் விஷயம்பற்றி திரு. சு. வே. சுப்பிரமணியம் அவர்களாலும் இரு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. அன்று பிற்பகல் 'இறைவழிபாடு' என்னும் பொருள்பற்றி பண்டிதை ஸ்ரீமதி. த. பாலாம்பிகையம்மாளால் ஒரு சொற்பொழிவும், தலைவரவர்களால் 'சைவ சமயமும் வருங்காலமும்' என்னும் பொருள்பற்றிய சொற்பொழிவும் நடைபெற்றன.

உபந்நியாசத் தேர்வில் திறமை பெற்ற சில மாணவ மாணவிகளின் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. சைவத் தேர்தலில் திறமை பெற்ற மாணவர்களுக்குப் பரிசல்கள் வழங்கப்பட்டன. நன்றியுரையோடு அன்று மாலை 7 மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது. இடையிடையே தமிழ்மறை ஓதப்பட்டது.

சுபம்!

### விளம்பரம்

வண்ணை ஐக்கிய சங்கக்கடை,
லிமிற்றெட்

மேற்படி சபையின் முதலாவது வருடாந்தப்பொதுக்கூட்டம் 1944-ம் ஆண்டு மே மாதம் 8-ந் திகதி திங்கட்கிழமை சிவப்பிரகாசம் ரோட்டிலுள்ள தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1944-ம் ஆண்டு மே மாசம் 5-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் தீர்மானங்களின் அறிவித்தல் காரியதரிசிக்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சிக் குறிப்புகள் தட்டாதெருவிலுள்ள கடை விளம்பரப் பலகையில் ஒட்டப்படும்.

T S. துரைராசா
கௌரவ காரியதரிசி

யாழ்ப்பாணம், ஏப்ரில் 28உ 1944

M18 20—1—4.5.44

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் மே 2

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 தேவாரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே கௌரி அம்மாள் வீணை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் பட்டம்மாள்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-50 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 5-45 இசைப் பயிற்சி 6 கே கௌரி அம்மாள் வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 இருண்டவன்கண் நாடகம் 8 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 8-45 மதராசில் உள்ளபடி 9-15 திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை புல்லாங்குழல் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகமாலிகை 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் மே 3

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வசந்தா, வாலட்சுமி, ஜீவாத்தினம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பி ஆர் சிவசங்கரம்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜே எம் அப்துல்கனி ஸிதார் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 பி ஆர் சிவசங்கரம்பிள்ளை பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 வாகூர் முத்துஸ்வாமிஐயர் வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அச்சுக்கூடம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 சூடாமணி சூர்யகுமாரி † 8-15 மதுரை மணி ஐயர் 9-00 யாகூர் முத்துஸ்வாமி ஐயர் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அமெரிக்க வாக்கு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் மே 4

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 ராமச்சந்திரராவ் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் எம் ராமஸ்வாமிஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி கல்பகம் நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 எஸ் எம் ராமஸ்வாமி ஐயர் புல்லாங்குழல் 5-45 இசைப் பயிற்சி 6 வி கல்பகம் நாராயணன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் லக்ஷ்மிநாராயண பாகவதர் பாட்டு 9 சப்தவேதி நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஜப்பானுக்கு இந்திய எதிர்ப்பு பேச்சு 10 இசைவேளை † 10-30 முடிவு.

### தேகவியோகம்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வாசரும் அதிகாரலம் இராமநாதன் கல்லூரி ஆசிரியராகவிருந்து இப்போது இளைப்பாறி யிருப்பவருமாகிய ஆசிரியர் திரு. N. கந்தையா அவர்களின் சிரேஷ்டபுத்திரி திலகவதி அம்மாள் சில நாட்களாகத் தம்மைப் பீடித்த சுவாதரோகம் காரணமாக இந்தமாதம் 13ந்திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தனர். இவர் தமது 16ம் வயதில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பாலபண்டித பரீக்ஷையிற் சித்தியெய்தினர். பின்னரும் பண்டித பரீக்ஷைக்குப் பயிற்சிபெற்று வந்தனர். சிவஞான சாஸ்திரங்களுமுணர்ந்தவர். இறக்கும்போது இவருக்கு வயது 18. இவரை இழந்து துயருறுந் தாய் தந்தை சுற்றமித்திராதியோர்க்கு எம் மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவமகாநாட்டுத் தலைமையுரை

### சைவத்திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் நிகழ்த்தியது

"காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே"

சிவநேயச் செல்வர்களே!

இம்மகா நாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி தமியேனைத் தங்கள் காரியதரிசியார் எழுதிக் கேட்ட போது எனது சிறுமையை அவருக்குத் தெரிவித்தேன். அவர் மீண்டும் வற்புறுத்தியதோடமையாது எனது பிரிய நண்பரும் சைவபரிபாலனமே தமது பொழுது போக்காகக் கொண்டவருமாகிய ஸ்ரீமத் சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்களைக் கொண்டும் என்னை நெருக்கினர். இவ்வாறாக அவ்விருவரும் என்னைப் பொருட்படுத்தி ஆதரித்தழைத்த போது திருவருட் சம்மதம் அவ்வாறுளதென்று கருதி யான் ஒருவாறு இணங்கினேன். முன்னர் இம்மகாநாட்டிற்குத் தலைவராக வந்தவர்கள் எல்லோரும் பட்டதாரிகளும் தமிழ்ப் புலவர்களுமாயிருக்க இவ்விரு வரிசையினுஞ் சேராத கடையேனையும் பரிந்தழைத்தது யான் முன் செய்த புண்ணியமென்றே நினைக்கற்பாலது. "அடியேன் முன்னைப் பிறவியினிற் செய்த தவம் பெரியவாறே" என்பது சேக்கிழார் திருவாக்கு.

சின்னாட் பல்பிணியுடைய எனது வாழ்நாளிற் கடந்த 35 ஆண்டுகளை அரசாங்க உத்தியோகத்தற் போசக் கேட்டபடியால் யான் சபையிற் பேசக்கூடிய சக்தியை வாய்க்கப்பெற்றிலேன்.

"வழுத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப்
பணியாதே"

என்னுந் திருவாசகம் எனக்குப் பொருத்தமுடைத்து. யான் முறையாய்ப் பிறரிடம் படிக்கவுமில்லேன். ஆனால் யான் என்றும் மாணவன். சைவானுஷ்டானங்களிலும் தமிழ் வளர்ச்சியிலும் எனக்குப் பிரியமதிகம். இப்பிரியத்தில் யான் ஒருவருக்குந் தாழ்ந்தவனல்லேனென்பதை மட்டும் தங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இப்பற்றே என்னை யாழ்ப்பாணப் பெரியார்களோடு தொடர்புண்டு பண்ணியது. அந்தொடர்பு காலுந்தோறும் வளர்ந்து என்னைத் தலைமை வகிக்கக்கூடிய நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. தாங்கள் எனக்கு அளித்த இக்கௌரவத்திற்கு என்றும் கடப்பாடுடையேன். [தாங்கள் என்மீது கொண்டுள்ள பேரன்பிற்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.]

ஒரு நகரத்திலே இரண்டாயிரம் மாணாக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஐந்து வயசிற்கும் இருபத்து நாலு வயசிற்கும் இடைப்பட்டவர்கள். அவர்கள் யாவருக்கும் ஒரே பாடம் படிப்பிக்க வேண்டுமென அரசினர் கட்டளை செய்திருக்கிறார்கள். ஐந்து வயசுப் பையனும் இருபத்து நாலு வயசுப் பையனும் ஒரே பாடத்தை வாசிக்கவும் ஒரே பாடத்தை எழுதவும் ஒரே கணக்குகளைச் செய்யவும் வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இதைப் போல அறிவற்ற கல்வி முறை நானே கேள்விப்பட்டதில்லை. வேறொரு நகரத்திலும் ஐந்து வயசிற்கும் இருபத்துநாலு வயசிற்கு மிடையில் இரண்டாயிரம் மாணாக்கர்கள் இருக்கிறார்கள் அவர்கள் படிப்பை ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி, சர்வகலாசாலைக் கல்வியென வகுத்து ஐந்து வயசு தொடக்கம் எட்டு வயசு வரையும் 'உள்ளவர்கட்கு ஆரம்பக் கல்வியை மூன்றுபடிகளாக வகுத்து அவர்களை மூன்று வகுப்பாக்கியும், ஒன்பது வயசு தொடக்கம் பதினைந்து வயசு வரையும் உள்ளவர்கட்கு உயர்தரக் கல்வியை ஆறுபடிகளாக்கி அவர்களை ஆறு வகுப்பில் வைத்தும், பதினாறு தொடக்கம் இருபத்துநாலு வரையும் உள்ளவர்களுக்கு சர்வகலாசாலைக் கல்வியை எட்டுப் படிகளாக்கி அவர்களை எட்டு வகுப்பில் விட்டும் படிப்பிக்கின்றார்கள். ஆகவே, அந்த நகரத்திலே, ஐந்து வயசு தொடக்கம் இருபத்துநாலு வயசு வரையுமுள்ள மாணாக்கர்களை, ஆண்டொன்றுக்கு ஒரு படியாக, பதினேழுபடிகளில் வைத்துப்படிப்பிக்கிறார்கள். இது தக்கமுறை என்பதை விவேகிகள் யாவரும் ஏற்றுக் கொள்வர். நாம் அறிந்த சமயங்களுள் பெரும்பாலன முதற் சொல்லப்பட்ட நகரத்து அரசினரைப் போல, கோடிக்கணக்கான சனங்களுக்கெல்லாம், இளையோராயினும் முதியோராயினும், விவேகிகளாயினும் மூடர்களாயினும், ஒரே போதனை, ஒரே அனுட்டானம், ஒரே வழிபாடு கற்பிக்கின்றன. இவற்றைப் போலாகாது, இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நகரத்தைப் போல, சித்தாந்த சைவமானது மனிதர் யாவரையும் ஐம்பத்திரண்டு வகுப்புகளாக்கி விட்டிருக்கிறது. இவற்றுள் கீழ்ப்படிகளிலுள்ளவை உலகாயதம் முதலிய புறச்சமயங்கள் ஆறுமாம். அவற்றுக்கடுத்தவை தார்க்கிகம் முதலிய புறச்சமயங்களாறும், பாசுபதம் முதலிய அகப்புறச்சமயம் ஆறும், பாடாணவாத சைவம் முதலிய அகச்சமயம் ஆறுமாம். இவற்றின் மேலாயுள்ள சித்தாந்த சைவமானது உபாயமார்க்கம் உண்மை மார்க்கம் என இருபெருங் கூறுகளையுடையதாய், ஒவ்வொன்றிலும் சரியையிற் சரியை சரியையிற் கிரியை சரியையில் யோகம் சரியையில் ஞானம் முதலாகப் பதினாறு படிகளையுடையதாய், இருபெருங் கூறுகளிலுள்ள முப்பத்திரண்டு படிகளைத் தன்னுள் அடக்கியிருக்கின்றது. பிற சமயங்களை அனுசரித்தல் சைவத்திற்குச் சம்மதமேயென்னின் அதற்குக் காரணம் தகுதியானவர்கள் அவ்வச் சமயத்தை அனுசரித்தலே சித்தாந்த சைவத்தின் சம்மதமாம். ஒரு சர்வகலாசாலையிலே, மிக உயர்ந்த வகுப்பிற் படிப்பவனுடைய கல்வியில் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளுக்குரிய கல்வியெல்லாம் அடங்குவதுபோல, பிறசமயங்களிலுள்ள வாய்மைகள் யாவும் சித்தாந்த சைவத்தில் அடங்கியிருக்கின்றன. இதனால் சித்தாந்த சைவத்தை எங்கும் நிறைந்த சமயம் என்பர். இது ஆங்கிலத்தில் 'Universal Religion'' எனப்படும்.

சித்தாந்த சைவமானது தன்னுள் அடங்கியிருக்கும் முப்பத்திரண்டு படிகளுக்குமுரிய வாய்மைகளையும் பயிற்சிகளையும் பயனையும் விரிவாய் அறுதியிட்டுக் கூறியிருக்கின்றது.

சமயம் என்பது அறிவைப் பற்றியதன்று; அது ஆன்மாவின் நிலை. அந்த நிலையை எய்துதற்குக் கடவுளுடைய திருவருள் பக்குவ பயிற்சிகள் இன்றியமையாதன. எம்பெருமானார் நாங்கள் ஆன்மா என்பதை அறிந்தாலும் அதைக் கொள்ளாமல், உடம்பையும் உடம்போடு கூடிய பொருட்களையுமே அபிமானிக்கின்றோம். நாம் உடம்பல்ல; நாம் ஆத்மா என்பதைக் கொள்ளுதற்கு அனுசரிக்க பயிற்சிகள் வேண்டும். அறிதலுக்கும் கொள்ளுதலுக்குமுள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றேன். "நான் இந்த உடம்பு அல்லன்" என்னும் உண்மையை நான் கொண்டால், ஒருவன் என்னுடைய கையைக் கத்தியினால் அழமாய்க் கீறும்போது, நான் அதைப் பொருட்படுத்தமாட்டேன், உடம்பு என்னின் வேறாதலால் அப்படியே உக்கிரமான தலையிடி அல்லது வயிற்றுக்குத்து இருக்கும்போது அவற்றைச் சிந்திக்கமாட்டேன். என்னுடைய ஆடையிலே நெருப்புப்பற்றி உடம்பை எரிக்கும்போதும் அது எனக்குத் துன்பத்திற்குக் காரணமாகாது. ஆயினும் உடம்பு என்னின் வேறாயதென்பது எனது அனுபவ உண்மையாகாமல் மேற் சொல்லியவை யாவும் என்னைத் துன்பப்படுத்தியே விடுகின்றன. தனு கரண புவன போகங்கள் என்னின் வேறானவை என்பது அனுபவ உண்மையாதற்குச் சைவப்பயிற்சி இன்றியமையாதது.

சைவப் பயிற்சிகளுள் விரத அனுட்டானம் உடலால் வரும் துன்பங்களைக் கொள்ளாது விடுவதற்குரிய தோன்றல் பயிற்சியாம். இதை, "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு" என்னும் திருக்குறளால் அறிக. உடலுக்கு வரும் துன்பங்களைச் சகித்துப்பழகுதலும் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் விரதத்தினுடைய வடிவமாம் என்பது இதன் பொருள். விரதங்களை அநுட்டிக்கும்போது செய்யப்படும் வழிபாடு இப்பயிற்சிக்குப் பெருந்துணையானதாம். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்று மணிவாசகப் பெருமான் சொல்லியருளியதால், சைவப்பயிற்சி எதற்கும் சிவபத்தியே உயிராதல் வேண்டும். அதிசமான சைவானுஷ்டானங்கள் சிவபத்தியை வளர்ப்பனவாயும், உடம்பும் உடம்போடு சேர்ந்த பொருட்களும் மயக்கத்தைத் தருவதாகிய மாயையின் காரியங்கள் என்பதையும், அந்த மயக்கத்திற்கு மூலமாயுள்ள ஆணவ மென்பதையும் உணர்த்துகின்றன. இவற்றுட் சிலவற்றை ஸ்தாலீபுலாகமாக எடுத்துக் காட்ட முயலுகின்றேன்.

சைவச் செயல்களும் யாவரும் எளிதிற் செய்யத்தக்கது திருநீறு பூசுதலாம். "முத்தி கொடுப்பது நீறு" என்றார் சம்பந்த சுவாமிகள். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி" என்றார் உமாபதி சிவம். தன்னிலைமை மன்னுயிர்கள் சார்தல் முத்தி ஆதலால், நீறானது சிவசத்தியென்பது பெறப்படுகின்றது. இத்திருநீறாகிய சிவசத்தியானது எமதுடைய நெற்றியிலே விளங்கத்தக்கதாயிருந்தால், அதற்கு மேலாக நமக்கு வாய்த்தக்க தவப்பயன் யாது! சிவபிரான் சிவலிங்கத்திலே எழுந்தருளியிருப்பது போல, பராசக்தி திருநீற்றிலெழுந்தருளியிருக்கிறது. இவற்றிலே முறையே சிவபிரானும் பராசக்தியும் விசேஷமாகச் சான்னித்தியமாதற்காக, இவற்றிலே மந்திர நியாசஞ் செய்தல் வழக்கமாகும். சிவலிங்கப் பிரதிட்டை செய்யும்போது இதற்காக அதிலே மந்திர நியாசஞ் செய்யப்படுகிறது. அது போலத் திருநீற்றுக்கு மூன்று விதமாக மந்திரம் பதிக்கப்படுகின்றது. தீட்சை பெறாதவர் "சிவ சிவ" என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு திருநீற்றை அணிவர். தீட்சை பெற்றவர்கள் இடையிடையே பூசும்போது திருவைந்தெழுத்தை உச்சரித்துக்கொண்டு பூசுவர். அப்போது [illegible] மந்திரம் திருவைந்தெழுத்தாகும். சந்தியா வந்தனம் செய்யும்போது திருநீற்றுக்குச் செய்யும் பிரதிட்டை அகலமானது. முதல் சம்கிதை மந்திரங்களை நியசித்துத் திக்கு பந்தனம் முதலியவற்றையும் ஐவகைச் சுத்திகளையுஞ் செய்து, மூலமந்திர நியாசம்பண்ணி உருத்திரரைத் தியானஞ் செய்த பின், அதைக் குழைத்து பஞ்சப்பிரமமந்திரங்களைச் சொல்லித் தரித்தல் முறையாகும். இதிலே சம்கிதை மந்திர நியாசம், திருவைந்தெழுத்து நியாசம், அதையணியும் போது அந்தந்த இடத்துக்குரிய பஞ்சப்பிரம நியாசமும் செய்யப்படுகின்றன. இந்த மந்திர நியாசங்களினாலே அத்திருநீறு பராசத்தியேயாகின்றது. ஆதலால் திருநீறு என்றும் வழிபாட்டுக்குரியது. அது அணிகிறவனுக்குப் பராசக்தி பிரதிட்டையாதலோடமையாது, காண்கிறவனுக்குப் பராசக்தி தரிசனமுமாகின்றது. குருடனொருவன் விளக்குக்கொண்டு திரிந்தபொழுது "இந்த விளக்கினால் உமக்கு என்ன பயன்?" எனவொருவர் வினவினர். அதற்கு அவன் "இந்தவிளக்கொளி மற்றவர்களுக்காக" என்றான். அதுபோலல்லாமல், விபூதியணிதல் தாமும் பிறருமாகிய இருபாலார்க்கும் ஆகின்றது. திருநீற்றின் வாய்மையைத்தனை நினைப்பித்ததற்காக சேரமான்பெருமாணயனார் வண்ணானைத் தொழுதுநின்றார். ஒருவனைக் காணும்போது அவனுடைய நெற்றியிலிருக்கும் திருநீற்றைக் காணப்பெறும் பயப் பிரயோசனமாதலால் திருநீறில்லாத நெற்றியைக் காணுதல் பிறப்பு, இறப்பு, பிணி ஆகிய இவற்றிலும் கொடியதென்று பின் வருமாறு மாணிக்கவாசகப் பெருமான் பாடியருளுகின்றார்.

"பிணிகெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்பரோ டழுந்தி யம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநா மஞ்சு மாறே"

திருநீறணிவதும் நிறைய அணிய வேண்டுமென்னுங்கருத்தாக "பூசிற்றுன் திருநீறே நிறையப்பூசி" என்று அம் மாணிக்கவாசகப் பெருமானே பாடியருளுகின்றார்.

வேறொரு சைவ அநுட்டானம் திருவைந்தெழுத்தை ஓதலாம், அது இம்மைமறுமை ஆகிய இரண்டிலும் எல்லையில்லாத நன்மையைச் செய்வது. பிறவியாகிய கடலிலே ஆழ்ந்துபோகாமல் மிதந்திக்கொண்டிருப்பது திருவைந்தெழுத்தென்பதை "தமியனேன் பெரும்பிறவிப் பௌவத்து ...... அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை" என்னுந் திருவாசகத்தாலும், உவர்நீர்க் கடலிலே கல்லோடு கட்டிப் போடப்பட்டபோது மிதப்பிப்பதும் திருவைந்தெழுத்து என்பது "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்னும் தேவாரத்தாலும் போதிக்கப்படுகின்றன. அன்றியும் வேதம், ஆகமம், சாத்திரங்கள் முதலிய யாவற்றிலுமுள்ள பொருள் திருவைந்தெழுத்தில் அடங்கியிருப்பதை

"அருநூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருணூல் தெரியப் புகும்"

என்னும் உமாபதிசிவத் திருவாக்கானறிக. இவ்வைந்தெழுத்தானது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களையும் அவற்றின் இயல்பையும் பதியோடு பசுவைச் சேர்ப்பதாகிய பராசக்தியையும் பாசத்தை முதிர்விப்பதாகிய ஆதிசக்தியையுமகாட்டுகின்றது. அக்காட்சியினாலே ஆன

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவமகாநாட்டு வரவேற்புரை

### திரு. R. சிவகுருநாதனவர்கள் நிகழ்த்தியது

சைவ நெறியைக் கடைப்பிடித்து அல்லும் பகலும் சிவன்பால் மனத்தை நாட்டி அவனருள் கொண்டு சிவதர்மத்தை உலகில் நடாத்த முயலும் எனது அன்பர்களாகிய இங்கு கூடியிருக்கும் பெண், ஆண் என்னும் இருபாலிலும் அமைந்த சிவதொண்டர்களுக்கு விநயத்துடன் எனது வணக்கத்தை அறிவித்துச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் பேரால் இந்த மாபெருங் கூட்டத்தில் உள்ள கனவான்களையும் பெண்மணிகளையும் உபசரித்து வரவேற்கின்றேன்.

இங்கு, எங்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சமுகமளித்திருக்கின்ற பெரியாரை இம் மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி நான் வேண்டிக் கொள்ளமுன், சில குறிப்புக்கள் சொல்லுவதற்கு உத்தரவு தரும்படி நான் உங்களெல்லோரையுங் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்கால சரித்திர ஆராய்ச்சி தொடங்கிய நாள் தொட்டு இந்த உலகத்தை முன்பாதித்த கஷ்டங்கள், அநியாயங்கள் எல்லாவற்றிலும் ஒப்புச் சொல்ல இயலாத பெரிய கஷ்டங்களும், அதர்மங்களும் இந்தப் பூலோகத்தினுள் உலகத்தை வாட்டுகின்றன. சரித்திரங்களாலும், இதிகாசங்களாலும், புராணங்களாலும் முன் நடந்த எத்தனையோ யுத்தங்களைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டும், வாசித்தும் அறிந்திருக்கின்றோம். ஆனால், சரித்திரக்காரர், எவ்வகையாகச் சொன்னாலும் அந்த யுத்தங்கள் குறிக்கப்பட்ட தேசங்களிலேயே நடந்தன; சில சமுதாயங்களை மாத்திரம் பாதித்தன; சில ஊர்களிலுள்ள மனிதரை மாத்திரம் தாக்கின. ஆனால், இப்போது நடக்கும் யுத்தமோ உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்றது. எல்லாத் தேசமக்களும், எல்லாச் சாதியினரும் எல்லா மதத்தினரும் இந்த யுத்தத்தின் பேரால் நேரில் மாளுகின்றனர்; கஷ்டப்படுகின்றனர் அல்லது அதன் காரணமாகத் தயங்குகின்றனர். மானிட சாதிக்கே இவ்வளவு கஷ்டங்கள் உண்டாவதற்கு ஆதிபகவானின் திருவுள்ளம் சம்மதித்ததைக் குறித்து நாங்கள் எல்லோரும் யோசிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். காரணம் வெளிப்படையாகத் தெரிகிறதென்று பலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். உலகத்தில் உள்ள பலவேறு மதங்களும் தங்களைக் கைக்கொள்ளுவோர் ஒவ்வொருவரும் ஆத்மபரிபாகத்தை அடைவதற்கு வழிகாட்டத் தெண்டிக்கின்றன. அந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் முழு மனத்துடனும் அவைகளை நம்பித் தங்கள் செய்கைகளில் கையாண்டு வருவார்களாகில் சமாதானம் இன்னும் என்னும் விளங்கும், மனித சமூகமே ஒப்பற்ற நிலையை அடையும். உலகமே சுவர்க்கம் ஆகும். ஆனால், இத்தற்காலத்திலோ உலகம் மதக் கொள்கைகளில் நம்பிக்கை அற்று வருகின்றது. தெய்வத்தைத் தீய துஷிக்கின்றார்கள், வலிமையே தெய்வமென்று கொண்டாடுகின்றார்கள். உலகத்தைத் தாங்குவது சிவமென்னும் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பற்றவர்களுக்குக் காட்டும் அன்பே அச்சிவம் என்பதையும் மறந்து விட்டார்கள். மார்க்கபோதனை குறைந்தே வருகின்றது. அதற்கு மூலமான மோகங்களும், நடத்தைகளும் எங்கும் பரவி வருகின்றன. இத்தகைய காலங்களில், எங்கள் தாய் நாடாகிய இந்தியா மேன்மையிலும் உலகத்தைத் திருத்தி அதில் மக்கள் சமாதானத்தோடும் நல்லுறவோடும் வசிக்கக் கூடிய போதனைகளைப் பரப்பி வந்தது. இந்தியாவில் உதித்த கொள்கைகளே இன்று வரையில் உலகில் உயரிய நிலையை அடைந்திருந்தன, இன்று இந்தியாவிலும் இலங்கையிலும் மகாயுத்தம் நெருங்கிவிட்டது; பஞ்சம் பரவிவிட்டது; கஷ்டங்கள் அதிகரிக்கின்றன. அவற்றின் காரணமாகப் பழைய கொள்கைகளே தளம்புகின்றன. உலக மக்களின் வாழ்க்கைகளே மாறி வழி தெரியாது, முடிவு அறியாது அலைகின்றன. இந்தக் காலத்திலன்றோ எல்லாம் வல்ல எம்பிரானை நாங்கள் முழுமனத்துடனும் வணங்கி மனித வர்க்கம் படுங் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு வழிகாட்டும்படி பிரார்த்திப்பது எங்கள் கடமையாகும். இன்னோரன்ன விஷயங்களை யோசிப்பதற்கும், ஆகவேண்டிய வழிவகைகளைக் கையாளுவதற்கும் இளைஞர் மத்திய சங்கம் இம் மகாநாட்டைக் கூட்டி வைத்திருக்கின்றது.

இதன் முன்னும் எத்தனையோ மகாநாடுகள் எங்கள் சங்கத்தாற் கூட்டுவிக்கப் பெற்றன. அவைகளிற் சைவத்திற்கும், தமிழுக்கும் மாபெருந் தொண்டாற்றிய பல பெரியார்கள் தங்கள் சிரமத்தையுங் காலத்தையும் பாராது எங்கள் தாய் நாடாகிய இந்தியாவில் இருந்து இங்கு வந்து சொற்பொழிவு ஆற்றினார்கள்; தங்கள் நடையினாலும், ஒழுக்கத்தினாலும் எங்களுக்கு அழியாத முன்மாதிரியைக் காட்டினார்கள்; நமநாட்டில் சைவத்தையும் அதன் சாதனைகளையும் பலப்படுத்தினார்கள்; தமிழ்ப் பாஷையை வளர்க்க உதவினார்கள். அவர்கள் எங்கள் தாய்நாடு எங்களை மறக்கவில்லை என்பதை நிரூபித்தார்கள்; தென்னாட்டு வளர்ச்சியைப் போல இலங்கையின் வளர்ச்சியும் முன்னேற வேண்டும் என்று விதந்தார்கள். அவர்கள் செய்த சொற்பொழிவுகளையும் போதனைகளையும் மக்களிற் பலர் நேரில் கண்டும், கேட்டும் அனுபவித்திருக்கின்றோம்; பயனும் அடைந்திருக்கின்றோம். முந்திய மகாநாடுகளில் தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்து சமுகமளித்த பல பெரியார்களுக்கும் அவ்வப் பொழுது சொற்பொழிவு ஆற்றி மகாநாடுகளைச் சிறப்பித்த நமநாட்டு அறிஞர்களுக்கும் நாங்கள் என்றும் அழியாக் கடமை பூண்டவர்களாக இருக்கின்றோம்.

அம்முறையைக் கொண்டே இந்த வருஷத்தில் எம் மகாநாட்டைச் சிறப்புவிக்கவும், நடாத்தவும் சைவத் திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சமுகமளித்திருக்கின்றார். இங்கு வருவதின் காரணமாக, அவர் பட்டிருக்கக் கூடிய கஷ்டங்களையும், வசதியீனங்களையும் நான் உங்களுக்கு விபரித்துச் சொல்லத்தேவையில்லை. அவர் சைவந்தழைக்கவும், தமிழ் தாழாது ஓங்கவும் செய்த, செய்து வருகின்ற, தொண்டுகளை நீங்கள் அறிவீர்கள். அவைகளிற் சில பின்வருமாறு:—

(1) அரிய தமிழ் நூல்களையும், சைவசமய நூல்களையும் காலத்துக்குக் காலம் திருத்தமாக வெளியிட்டு வருகின்றார்.

(2) சைவ சமய வளர்ச்சியின் பொருட்டுச் சொற்பொழிவுகள் ஆற்றி வருகின்றார்.

தொடர்ச்சி [illegible]-ம் பக்கம்

## அகில இலங்கைச் சைவ மாநாட்டுத் தலைமையுரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவானது தன்னை மயக்கித் தீயவழியிலே செலுத்துவது எது என்பதையும், தன்னை விளக்கித் தூய வழியிலே செலுத்துவது எதுவென்பதையும் அறிகின்றது. எனக்குச் சகல தீமைகளுஞ் செய்யத்தக்க பரமதுஷ்டனொருவன் என்னுடைய ஒரு கையைப் பற்றி இழுக்க, என்னைப் பெற்றுவளர்த்துச் சகல சுகங்களுஞ் செய்கின்ற என்னுடைய தந்தையார் என்னுடைய மற்றக் கையைப் பற்றி இழுக்க, நான் என்னுடைய தந்தையார் பக்கத்துக்கே சாரவேண்டும் என்பதைப் பற்றி எள்ளளவேனும் ஐயமுண்டாதல் கூடுமோ?

"ஊனநடனம் ஒருபால் ஒருபாலாம் ஞானநடம் தான் நடுவே நாடு"

என்பது இதனைக் குறிக்கின்றது. ஆதலால் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பவர் தம்மை மயக்கிக் கொடுப்பதாகிய பாசங்களின் வழிச் சாராமல் தம்மைச் சிவமாக்குவதாகிய அந்தப்பாசத்தினை நாடி நற்செயலும் நல்வாக்கும் நற்சிந்தையும் உடையராக முயலுவர். திருவைந்தெழுத்தை ஆகமம் ஓதிவா சிவச்சார்பு பலமடைந்து உலக வாழ்க்கையாகிய வஞ்சனையிலாக கனவு குறைந்து குறைந்து நீங்கி நனவுக்கு வழியாகும். எங்களுடைய நனவு நிலையை நீக்குதல் அரியவற்றுள் அரிது. கும்பகர்ணனுடைய கனவை நீக்கி அவனை நனவுநிலைக்கு வரச் செய்தற்குச் செய்த முயற்சிகளோ பல. யானைசிங்கங்கள் அவன் மேல உழக்கின. ஆயிரம் மல்லர்கள் வேல்களையும் ஈட்டிகளையும் அவன் செவிகளுட் புகுத்தினார்கள். குதிரைகளை அவன்மேல் வலசாரி இடசாரியாக ஊர்ந்தார்கள். இறுதியில் ஆயிரம் அரக்கர்கள் இருப்புலக்கையால் மோதினார்கள். இவ்வாறு கும்பகர்ணன் ஒருவாறு விழித்தானாயினும் நாமோ எவற்றாயினும் விழிக்கின்றிலம். விதிப்படி திருநீறணிதலும் திருவைந்தெழுத்தோதலும் கும்பகர்ணனுக்குக் கொடுக்கப்பட்ட இருப்புலக்கை யடிபோல, எமது மயக்கத்தைத் தீர்த்து விழிக்கச் செய்தற்கு உதவத்தக்கவைகளேயாம், இவைகளிரண்டும் சந்தியாவந்தனத்தின் கூறுகளாம், அதன் ஏனைய கூறுகளும் இவற்றைப்போலவே எம்மை விழிக்கச் செய்யுங் கருவிகளாம்.

சைவ அநுட்டானங்களுள் வேறொன்று சிவாலய வழிபாடு. இது உலகமயக்கத்தை நீக்கி உண்மையை உணர்த்துதல் பிரத்தியட்சம். ஆலயத்திலே நாம் கடவுளை நேரே காண்கிறோம். "நாம் கடவுளைக் காணுதல் சாலுமோ" என்று யாராவது மறுத்துவினவுதல் கூடும். "மெய்ஞ்ஞானியல்லாதான் கடவுளைக் காணுதல் இயலாது" என்று உறுதியாகச் சிலர் கூறுதலுங் கூடும். நாம் ஆலயத்திலே கடவுளைக் காண்பது மெய்; மெய்ஞ்ஞானி கடவுளைக் காண்பதும் மெய். காணுதலிலே வேறுபாடுண்டு. நான் உங்களைக் காண்கிறேன். ஞானகுரு வொருவர் உங்களில் ஒருவரைக் காண்கின்றார். அந்த இருவகைக் காட்சிக்குமுரிய வேறுபாடு யாதெனில், நான் உங்களைக் காணும்போது எனக்குப்புலப்படுவது உங்களுடைய உடம்பு. ஆயினும் நான் காண்பது உங்களையேயாம். நான் ஒருவரோடு பேசிவிட்டு அவருடைய உடம்போடு பேசினேனென்று சொல்லமாட்டேன். அவரோடுபேசினேனென்றே சொல்லுவேன். அவரோடு பேசுதற்கும் காணுதற்கும் வாயிலாயுள்ளது உடம்பு. ஆயினும் [illegible] தமமுடைய சீஷனைக் காணும்போது, அவருடம்பை வாயிலாகக்கொள்ளாது ஆன்மாவை நேரே காண்கிறார். நாம் ஒரு மனிதனைக் காணும்போது, உடம்பு மாத்திரம் காட்சிக்குப் புலப்படவும் அந்த உடம்பை அதிட்டித்து நிற்கும் அவனுடைய இயல்பையே காண்கின்றோம். அதேபோல, ஆலயத்திலே திருவுருவத்தின் வயிலாக நாம் கடவுளையே காண்கின்றோம். மெய்ஞ்ஞானியானவன் திருவுருவத்திலேயன்றி வேறிடங்களிலும் தானே சிவமாய் சிவத்தை யறிகின்றான். அப்போது காண்பவனும் காணப்படுபவனும் காட்சியும் சிவமேயாயுள்ளன. ஆதலால் ஒரு மனிதனுடைய உடம்பைக் காணும்போது நாம் அவனைக் காண்பதாகக் கொள்வதுபோல, ஆலயத்திலுள்ள விக்கிரகத்தைப் பார்க்கும்போது அதை அதிட்டித்து நிற்கும் கடவுளைக் காண்கிறோமென்று சொல்லுதல் பொருத்தமானதாம். ஆகவே, கோயிலுக்குட் போகும்போது கடவுளைக் காண்கின்றோம். அவரே மெய்ப்பொருளென்பது எங்களுடைய மனத்தில் உடனே எழுகின்றது. அதிலிருந்து நாம் ஆன்மா வென்பதும் மாயப் பொருள்களாகிய உலகப்பொருளெல்லாம் தவைகள் என்ற கருத்தும் தானாகவே முனைத்து எழும். அப்போது எங்களுடைய வாழ்க்கை உண்மையனவாழ்க்கையாகின்றது. "வஞ்சனையிலாத கனவே" என்று தாயுமானவர் சொல்லிய கனவு நீங்குகின்றது. நாங்கள் அந்தச் சமயத்திலே சிவலோகத்தில் இருக்கின்றோம். திருக்கோயிலுட் சென்றவுடனே, முதன்முதல் விநாயகரைத் துதிக்கின்றோம். "மண்ணுலகத்தினிற் பிறவி மாசற" என்று சொல்லுமுன் உலகப்பற்றுச் சற்றே தங்கியிருந்தாலும் அதைச் சொன்னவுடனே அவ்வளவும் மறந்தும் பறந்துவிடும். பிறவியானது 'மாசு' என்றும், அது அறவேண்டுமென்றும் நாம் சொல்லும்போது, மண்ணுலகத்தினிற் பிறவியாகிய இவ்வுடலும் இவ்வுடலோடு தொடர்புடைய புவனபோகங்களும் 'மாசு' என்று அருவருத்துத் தள்ளுகின்றோம். அப்போது, விநாயகரைக் காண்கின்றோம். அவருடைய திருமுகத்தினின்று பொழிகின்ற கருணையைக் காண்கின்றோம். அதனாலே எம்முடைய மனமும் உருகி அவர்பாற் செல்கின்றது. அவர் "தாயிற்சிறந்த தயாவான தத்துவன்" ஒரு குழந்தையும் தாயும் ஒருவரையொருவர் பார்க்கும்போது குழந்தையைக் கண்டவுடனே தாயுடைய முகத்திலும் கண்களிலும் அன்பு சுரக்கின்றது; தாயைக் கண்டு குழந்தையினுடைய முகத்திலும் கண்களிலும் அன்பு சுரக்கின்றது. இது வரவரப்பெருகுகின்றது. தாய் குழந்தையைத் தூக்கி மடியில் வைக்கின்றாள். குழந்தை பால் குடிக்கின்றது. கடவுளிடத்தே சுரப்பதாகிய அன்பும் இடம் நிறைந்த ஞானமயமாகிய பாலைப் பருகுதற்கு நாம் சாகங்கொண்டால், அதைப் பருகலாம். ஆயினும் நாம் பருகுகின்றோமில்லை. எமக்கு அந்த ஞானமாகிய பால் கைக்கின்றது. மலமாகிய பித்தம் எங்களிலே அதிகரித்து நிற்றலால், 'தத்துக்கும் பால்தானும் கைக்கும்' என்றார் உமாபதிசிவம். பித்தம் அதிகரிக்கும்போது உள்ளபடி கைப்பான பொருள் தித்திக்கும். பித்தம் நீங்கினவர்களாகிய மாணிக்கவாசகர் போன்றவர்கள் சிவஞானருளும்ஞானத்தை இடைவிடாமற் பருகுகின்றனர். மடியிலிருந்து ஒருகணமும் இறக்கிவிட்டாலும் "நான் மெலியப்போகின்றேன் பால்தந்தா" என்று மணிவாசகப் பெருமான் அழுது சொல்வதைக் கேளுங்கள்:—

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கைச் சைவ மகாநாட்டுத் தலைமையுரை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"தாயாய் முலையைத் தருவானே
 தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
 நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
 தயாநீ யென்பா லிலையே
நாயே னடிமை யுடனாய் ஆண்டாய்
 நான்றான் வேண்டா வோ"

நாம் கடவுளுடைய திருமுன்பு நின்று அவருடைய பெருங்கருணையைக் கண்டு கசிந்து நிற்போம். அப்படி நிற்கும்போது, எமது பரமமாதாவாகிய ஈசன் எங்களை எத்தனையோ விதமாக ஆதரித்து உயர்ந்த ஞானத்தைத் புகட்டுவார். அவருடைய திருவுருவத்தின் ஒவ்வொரு கூறும் அநேக அருளுபதேசங்களைச் செய்யும் அக்கூறுகளுள் ஒன்றிற் பெறப்படும் பாடங்களை மாத்திரம் இப்போது எடுத்துக்கூற முயலுகின்றேன். கோயிலிலுள்ள அநேக மூர்த்திகளின் அபயமென்றொரு திருக்கரமுள்ளது. அந்தத் திருக்கரம் "நீ யொன்றுக்கும் பயப்படலாகாது"? என்று வழிபடுவோனுக்குணர்த்துகின்றது. அதை விபுத்துச் சொல்லுகில, "உனக்கு இக்காலத்திலே பல வகையான இடர்கள் நேர்ந்துள்; அவைகளை யாவும் உனக்குநன்மையானவையேயாம்; தீமையானவையல்ல; உனக்கு எது நேரினும் அது எமது ஆணைப்படி வருகின்றது. நான் உனக்குப் பொல்லாங்குசெய்பவனு? உனக்கு இடையறாமல் நன்மை செய்வதல்லவா என்னுடைய தொழில்; உண்மையான இன்பங்களும் துன்பமாகவே தோற்றும். உன்னுடைய கையில் ஒரு புண் வந்தால் அந்தப் புண்ணை நீக்குதற்காக அதற்கு ஆயுதவிருக்கின்ற வைத்தியம் தொழில் செய்யும்போது எவ்வளவு விறுவிறுப்பும் குத்து வேதனையும் ஆனாலும், சிலகாலங்களிலே காயமும் உண்டாகின்றன, இந்த வேதனையைத் தரும் முயற்சியெல்லாம் அந்தப் புண்ணை நீக்கும் தன்மையன அல்லவா? அப்புண் அவ்வளவோடு தீராதாயின் வைத்தியன் உன்னிடம் வந்து நீ கதறக் கதற அந்தப் புண்ணை வெட்டுகின்றானல்லவா? அப்போது நீ எவ்வளவாகத் துன்பப்படுகிறாய், துன்பப்பட்டாலும் அது உனக்குச் சுகமாயானதுதானே. அப்படிச் செய்தாலல்லவோ அப்புண் நீங்க நீ சுகப்படுவாய்; அதுபோல உன்னுடைய தின்னையாகிய புண்ணைத் தீர்த்தற்காக நாம் உன்னைப் பலவாறு வருத்துகின்றோம்; அதெல்லாம் உனக்கு நன்மையானதே என்பதைத் தெளிந்து ஒன்றுக்கும் நீ அஞ்சாதே; நான் இருக்கும்போது உனக்கு ஒரு விதமான தீமையும் வாராது; ஒன்றுக்கும் நீ பயப்படாதே" என்று அந்தத் திருக்கரம் போதித்தவாறும், இந்தப் போதனையை அப்பாசுவாமிகள் திருவிருத்தமொன்றிலே பின்வருமாறு பாடியருளுகின்றார்.

"மண்பா தலம்புக்கு மால்கடன்
 மூடிமற் றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர்
 வீழினு மஞ்சனஞ்ச
திண்பா னமக்கொன்று கண்டோம்
 திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான்
 கழலிணையே"

அத்திருக்கரம் மேன்மேலும் உணர்த்துவது யாதெனில் "நீ யொன்றுக்கும் கவலைப்படாதே" நீயும் உன்னவர்களும் ஊண் உடை முதலிய வற்றுக் குறைவற வாழ்தற்கு வேண்டிய பொருளில்லையே என்ற செருக்கத்தினாலாகிய வீண் கவலைகளைவிடு. நீ கன்முயற்சி செய்வாயின் உனக்கு ஒருவிதமான குறையும் நேராது; கவலையை யொழி; பராபரக்காதே; ஆறுதலாயிரு"; என்று உணர்த்துவதாகும். அது

"புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
 புயங்கள் தாளே புந்திவைத்திட்
 டிகழ்மி னெல்லா வல்லலையு
 மினிபோ யிடையூ றடையாமே
 திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
 சென்று சிவன்றாள் வணங்கி நாம்
 நிகழு மடியார் முன்சென்று
 நெஞ்ச முருகி நிற்போமே"

என்ற திருவாசகத்திற் றெளிக்கின்றது.

அத் திருக்கரமானது வேறுமொரு பொருளை உணர்த்துகின்றது. ஒருவனை ஒருபிழை செய்யப்போகும்போது அதைத் தடுத்தற்கும் கையையுயர்த்துவதுண்டல்லவா? அப்படியே, நாம் பிழைவழியிலே செல்லும்போது எம்மைத் தடுப்பதும் அத்திருக்கரமாம். "நீ உலக விஷயங்களிலே அதிகமாக காடுகின்றாய்; ஆணவ மயக்கத்தினாலே அவைகள் நல்லவைகளாகத் தோன்றுகின்றன. உள்ளபடி அவைகள் உனக்குத் தீமையானவை; உனக்கு நன்மையானவைகளைத் தேடிக்கொள். மற்றவைகளை ஒன்றையும் தேடாதே; அவற்றிலே உன் மனத்தை விட்டாயானால் நீ அவற்றிலே மாண்டுபோவாய்; உனக்குக் கேடானவற்றைத் தேடுதற்குச் சூழ்ச்சி செய்யாதே," என்று இவ்வாறு உணர்த்தும் அத்திருக்கரமானது தீநெறியினின்றும் இழுத்து நன்னெறியிற் செலுத்துகின்றது. இதை மணிவாசகப் பெருமான் பின்வருமாறு மிகத் தெளிவாயும் விளக்கமாயும் பாடியருளுகின்றார்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
 வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை
 யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்
 கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ யவலக் கடலாய
 வெள்ளத்தே"

இத்திருக்கரமானது இன்னும் எத்தனையோ பல உபதேசங்களை உணர்த்துவதாகலாம். எமக்கு வேண்டியவற்றைச் சொன்னோம். இவ்வாறே ஏனைய திருக்கரங்களும் உபாங்கங்களும் அங்கங்களும் அநேக நல்லொழுக்கங்களையும் ஞான வாய்மைகளையும் உணர்த்துகின்றன. நாம் கோயிலிலே வழிபடும்போது இவற்றையெல்லாம் பெறுகின்றோம்.

இதுவரையில். திருநீறணிதல், ஐந்தெழுத்தோதல், ஆலய வழிபாடு ஆகிய மூன்று அனுட்டானங்களால் வரும் பேறுகளுட் சிலவற்றைக் கூறினோம். இவற்றைப் போன்றவைகளாகிய ஏனைய அனுட்டானங்களின் பேறுகளை உய்த்துணர்ந்து கொள்க. சந்தியாவந்தனம் சிறந்ததோர் அனுட்டானமென்று இடையிலே குறிப்பிட்டேன்.

அதிலேவரும் சுவீகரணமும் சோக்ஷண வகையும் ஆன்மாவைப் புனிதமாக்கத்தக்கவை. அவைகளை ஆராய்ந்தறியும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இச் சைவ அனுஷ்டானங்களும் சிவபூசை முதலிய ஏனைய அனுட்டானங்களும் பயிலப்படுமிடத்து, அவற்றின் விளைவு சிவகதியாம். அவற்றிற்குப் பாய்ச்சப்படும் நீர் திருவருட் பாக்களாம். நாம் மெழுகிலே ஓர் முத்திரை வைக்கவேண்டுமானால் அம்மெழுகு உருகுதல் வேண்டும். அதுபோல சைவ அனுட்டானங்களால் வரும் போதனைகளை எமது உள்ளத்திலே பதித்து ஸ்தாபப்படுத்த நாம் விரும்புகில அதை உருக்குதல் வேண்டும். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது ஓர் அரியபழமொழி. தேவார திருவாசகங்களும் ஏனைய அருட்பாக்களும் எமது உள்ளத்தைக் தீநெறியினின்று விலக்கவும் நன்னெறியில் செலுத்தவும் சிவபெருமானது திருவருள்கொண்டு நிறைக்கவும் வல்லவைகளாம். அவற்றுட் சில கடவுளைத் துதித்தற்குரிய மந்திரங்களாம், திருவாசகத்திலே போற்றித் திருவகவலிலே "தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்பது முதலாக "போற்றி போற்றி புராணகாரண" "போற்றி போற்றி சயசய போற்றி" என்பது "இருநூற்றைம்பத்தொரு மந்திரங்கள் இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் பாடியருளிய போற்றித் திருத்தாண்டகங்கள் ஐந்தும் சிவபூசையில் ஆத்மார்த்தம் பரார்த்தம் ஆகிய இரண்டிலும் அர்ச்சனைக்கும் உரியனவாம். தேவார திருவாசகங்களின் இனிமையும் பயனும் சொல்லி முடியத் தக்கனவல்ல. ஒவ்வொரு தேவாரமும் ஒவ்வொரு திருவாசகமும் ஒவ்வொரு விதமான பயனையும் இனிமையையும் உடையது. ஆதலால் அவைகளை வகுத்துச் சொல்லுதலுமரிது. அவற்றின் நயத்தை ஒறவைச்சொல்லிற் சொல்லுங்கால் 'அவைகள் என்னுடைய உயிரினும் அரியன" என்று திடமாயும் உறுதியாயும் சொல்லுவேன். அவற்றின் அருமையைக் காட்டுதற்காக ஓர் திருவாசகத்தையும் ஒரு தேவாரத்தையும் மாத்திரம் எடுத்துக் காட்டுகின்றேன். திருச்சதகத்திலுள்ள முதற் திருவாசகத்தின் பெருமையை அளவிடத் தக்கவர் யாவர்! கடவுளை வணங்கும்போது ஒருவனுடைய நிலை இத்தன்மைத்தென்று விரித்துக்கூறி, அந்நிலை தன்னை விட்டகலாதிருக்கவேண்டுமென்று யாசிக்கின்றார். அந்நிலை எமக்கு வாய்க்குமாயின் அப்போதுதான் நாம் கடவுளை உள்ளபடி வணங்குகின்றோமென்று திருப்தியடையலாம். நாம் அந்த நிலையை அடையும் வரையும் எங்கள் வழிபாடு குறைவுடையதேயாகும். கடவுளை நினைக்கும்போது எமது உடம்பானது பரவசப்பட்டு அரும்பி நடுங்கும்; கைகள் சிரசின்மேற் செல்லும்; கண்ணீர் ததும்பும்; உள்ளம் உருகும்; நிலைபற்றவைகளாகிய தனு கரண புவன போகங்களைப் பற்றிய சிந்தனையகலும்.

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்
 துன் விரையார் கழற்கென்
கைதான் றலை வைத்துக் கண்ணீர்
 ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப்
 போற்றி சயசய போற்றியென்னும்
கைதானெகிழ விடேனுடையாயெ
 னைக் கண்டுகொள்ளே"

இங்ஙனம் வழிபட்டுப் பெற்ற சிவானுபவத்தின் சீரை ஒரு தேவாரத்தில் காட்டுவாம்.

"குழலும் கொன்றையும் கூவிள
 மத்தமும்
தழலும் தையலோர் பாகமாத்
 தாங்கினான்
அழகனாவடுதண்டுறை யாவெனக்
 கழலுங் கைவளை காரிகையாளுக்கே"

அஃதாவது ஒரு பெண் இருக்கின்றாள். அவளுக்கு முன்னே யாராவது ஆவடுதுறையா என்ற பெயரை மாத்திரம் சொன்னார்களாயின் அது கேட்குமுன்னமே அவள் தன்வயமற்று பரவசமாகி உடம்பு எல்லாவிலாமற் சோர்வதனாலே, அவளுடைய கையிலிருக்கும் வளையல்கள் நழுவி விழுகின்றன. இங்கேபெண் என்றது அப்பர் சுவாமிகளாகிய ஆன்மா ஆவடுதுறையாவென்றவுடனே அவர் சிவவசமாகின்றார் என்பது பொருள்.

திருவருட்பாக்களுள் பெரியபுராணம் அடியாருடைய சிவானுபவங்களையும் கூறுவது. அடியார்களுடைய வாக்கு உள்ளத்தை உருக்குவதைப்போலவே அவர்களுடைய வாழ்க்கையும் எமது உள்ளத்தை உருக்கிச் சிவவசமாக்கத்தக்கது. உலக வாழ்க்கையிலே நாம் யார் யாரோடு கூடுகின்றோமே யாரை யாரை மதிக்கின்றோமோ அவர்களைப் பற்றுவதே எமது இயல்பு. சிவனடியார்களை நாம் மதிக்கின்றோமென்பது மறுக்கத்தக்கதன்று. அவர்களுடைய திருச்சரிதைகளைப் படிக்கும்போது அவர்களைப் பற்றிய சிந்தனை எம்மில் நிலைக்கின்றது. அதனாலே அவர்களைப் பின்பற்றிச் சிவபதத்தைப் பெறுகின்றோம். சிவகதி என்பது ஒன்று உண்டென்பதற்கு ஸ்திரமான சாட்சி அவர்களேயாம். சைவ சமயத்தை அனுட்டித்தாலே என்ன பயனென்று ஒருவர் கேட்டால் பெரிய புராணத்திலே கூறப்படும் அடியவர்களைச் சுட்டிக் காட்டுவோம். அதோ இருக்கிறார்கள் சைவசமயத்தை அனுட்டித்துச் சிவத் தன்மையைப் பெற்றவர்கள். நாமும் அவர்களைப்போல் முயன்றால் அந்த நிலையைப் பெறுவோமென்று மனநிறைவோடு சொல்லுவோம்.

எந்தச் சைவ அனுட்டானத்துக்கும் இன்றியமையாத மனநிலைகள் இரண்டுண்டு. அவற்றுள் ஒன்று சிவபிரானுடைய பெருமையை எண்ணுதல். அவருடைய பெருமையை எமது உள்ளமேனும் சொல்லேனும் அளக்கமாட்டாவாயினும், அதைப்பற்றி நாம் சிந்தித்தலாலும் அது திருவண்டப் பகுதியிலே அசேதனப் பொருள் வழியாகவும் சேதனப்பொருள் வழியாகவும் இருவழியாகப் பாராட்டப்பட்டிருக்கிறது. மாயையிலிருந்து தோற்றிய உலகங்கள் யாவும் ஒருங்கு சேர்ந்தாலும், அவற்றின் தொகுதி, "தற்றுழையுநுழை துன்னிணுப்பு நையைச் சிறுவராகப் பெரியானை" என்றும் மும்மை மாயைகளிலுமிருந்து தோன்றும் உலகங்களை

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

### விளம்பரம்

#### தேங்காய்ப் பிண்ணுக்கும் நீலமும் விநியோகஞ் செய்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஐக்கிய சங்கக் கடைகளின்மூலம் தேங்காய்ப்பிண்ணுக்கும் நீலமும் விநியோகஞ் செய்தற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஐக்கிய சங்கங்களில் தம் மாடு ஆடுகளுக்குத் தேங்காய்ப் பிண்ணுக்கு உபயோகிக்கும் அங்கத்தவர்களும் நீலம் உபயோகிக்கும் கட்டாடிமாரும் தாம் தாம் அங்கத்தவராயிருக்கும் ஐக்கிய சங்கங்களுக்குத் தத்தம் பெயர்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

2. அங்கத்தவரல்லாதவராய், தங்கள் மாடாடுகளுக்குப் பிண்ணுக்குத் தேவைப்படுவோரும், அங்கத்தவரல்லாதவராய், நீலந் தேவைப்படும் கட்டாடிமாரும் தங்கள் தங்கள் எல்லைக்குள் உள்ள சங்கக்கடைச் சப்-இன்ஸ்பெக்றர்களோடு கலந்தாலோசிக்கவும்.

3. இதற்குமுன் என்றல் தனிப்பட்ட பேர்வழிகளுக்குக் கொடுத்துள்ள பிண்ணுக்குக்குரிய உத்தரவுச் சீட்டுக்களெல்லாம் தள்ளப்பட்டிருக்கின்றன. அத்தகைய உத்தரவுச் சீட்டுக்களை வைத்திருப்போரனைவரும் மேற்குறித்தபடி நடந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

எப். ஏ. சந்திரசேகரா,
உதவி றிஜிஸ்டார், C. S., N. D.
யாழ்ப்பாணம்,
20—4—44

G. 18 1.5.44

## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கைச் சைவ மகாநாட்டு வரவேற்புரை

4ம் பக்கத் தொடர்ச்சி

(3) அவர் எங்கள் நாவலர் பெருமானிற் கொண்டுள்ள அன்பும் ஆர்வமும் அளவில. அவருடைய குருபூசையை வருடந்தோறும் தம்முடைய சிருகத்தில் நடத்தி வருகின்றார்.

(4) தமிழ்மொழி வளர்ச்சி கருதியும், சைவசமய அபிவிருத்தி கருதியுஞ் சிறந்த கட்டுரைகள் பத்திரிகைகளுக்கு எழுதி வருகின்றார். அவைகளிற் பல நமது இந்துசாதனத்தில் வெளி வந்திருக்கின்றன. அவைகளை நாமெல்லாம் கற்றும், ரசித்தும் இருக்கின்றோம். ஆனால், அவருக்கு விசேஷமாக உரிய ஒரு சிறப்பை நான் இங்கு கூற விரும்புகின்றேன். இலங்கைக்கு அவர் மூன்று முறை இப்பொழுது வந்திருந்தாலும், இங்குள்ள தமிழரனைவரும், சைவ மக்களினதும் நோக்கங்களையும், நிலையையும் நன்கு விசாரித்து, படித்து, அறிந்து இருக்கின்றார். எங்கள் தலைவர்களிற் பலருடன் நட்புக்கொண்டு அவர்களைத் தம் ஊருக்கு அழைப்பித்துச் சகோதரர்களுக்குச் செய்யக்கூடிய உபசாரங்களிலும் பார்க்க மேலதிகமான உபசாரங்கள் செய்து அவர்களிற் பலருடைய பிராண சிநேகிதர் ஆகிவிட்டார்.

இந்தப் பெரியாரின் நட்பைப் பெறப் பாக்கியம் பெற்ற தலைவர்களிற் பிரதானமானவர்கள் காலஞ்சென்ற குகதாசன் என்னும் புனைபெயருடன் சைவத்திற்கும், தமிழுக்கும் அழியாத தொண்டியற்றிய எங்கள் தலைவன் திருவாளர். சபாரத்தின முதலியாரவர்களும், சரித்திர ஆராய்ச்சியாளர் எனப் புகழ்பெற்ற காலஞ்சென்ற திருவாளர். செ. இராசநாயக முதலியாரவர்களும், தெய்வ அருளால் இன்றும் எங்களுக்கு வழிகாட்டிவரும் திருவாளர். சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்களும், திருவாளர். ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையவர்களும், முகாந்திரம். கந்தையா அவர்களும், பிரமஸ்ரீ. தி. சதாசிவ ஐயரும் இன்னும் பல பெரியார்களுமாம். இந்தத் தலைவர்களின் மதிப்பையும், அன்பையும் பெற்றிருக்கின்ற எங்கள் திருவாளர். ஐயம்பெருமாள் பிள்ளையவர்களின் குணாதிசயங்களையும், படிப்புயர்வையும் சமயப் பற்றையும், தமிழ் மொழிப் பற்றையும் நான் மேலதிகம் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. இந்தக் கஷ்டகாலத்தில் முன் ஒருபோதும் நடந்திராத, நடக்கக்கூடுமென்று காதில் கேட்டிராத சம்பவங்கள் எங்கும் மலிந்து மனித வர்க்கத்தையே பாதிக்குஞ் சமயத்தில் ஆத்ம சுகத்திற்காகச் சைவதர்மத்தை வளர்க்கும்படி நாங்கள் யோசிக்க வேண்டியிருக்கும் வேளையில் திருவாளர். ஐயம்பெருமாள் பிள்ளை அவர்களே இம்மகாநாட்டைத் திறந்து, இதற்குத் தலைவராயமர்ந்து இலங்கைச் சைவமக்களுக்கு வழிகாட்டியாய் இருக்கும்படி அதி விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். மகாநாட்டின் நோக்கம் பெரிது. இச்சபையோ தெய்வசபைபோல விளங்குகின்றது. இதைச் சிறப்பிக்கும் ஆண், பெண் பாலாராகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் உபசாரத்தைச் செலுத்தி, எங்கள் மகாநாட்டில் நடக்கவிருக்கும் நடவடிக்கைகளும், தீர்மானங்களும் சைவத்தையும், தமிழையும் உயர்த்தக் கூடியவை செய்தல் வேண்டுமென ஆண்டவனின் திருவடி பணிகின்றேன்.

## அகில இலங்கைச் சைவ மகாநாட்டுத் தலைமையுரை

5-ம் பக்கத் தொடர்ச்சி

படைப்பவர்களைப் படைப்பவரும் காப்பவர்களைக் காப்பவரும் இவர்களை ஒடுக்குபவரும் அவரேயென்றும் அங்குச் சொல்லியிருப்பதை நாம் சிந்திக்கலாம். அப்படியான சிந்தனைதான் சிவசிந்தனையாகும். அவருடைய திருப்பெயரை நாம் சொல்ல உன்னும்போதும், அவருடைய பெருமை எம்முடைய மனத்தை நிறைத்தல் வேண்டும். அப்படி நிறைக்குமானால், அப்பெயரை நாம் உச்சரிக்கும்போது அதைக் கேட்பவர்கள் அற்புதமடைவர். இப்படியாக அவருடைய பெருமை எம்முடைய உள்ளத்திலே பதியுமானால் தீய எண்ணங்கள் எழுந்தாலும் அவைகள் மின்னல்போல மறைந்து போம். தீவினைகளுக்குக் காரணம் காமம் வெகுளி மயக்கம் என்று பெரியோர்கள் கூறுவர். காமம் என்பது பொருள்களில் கொள்ளும் ஆசை. சகல உலகங்களும் கடவுளுடைய பெருமைக்கு முன்னே சூனியமாகும்போது அவ்வுலகங்களில் கோடானு கோடியிலொரு கூறாகிய இப் பூலோகம் அதிசூனியமாதலும் இப்பூலோகத்தில் கோடானு கோடியிலொரு கூறாகிய அப்பொருள் அதிசூனியதமமாதலும் புலப்படும். அப்போது அதிலே ஆசையெழாதிருத்தலுங்கூடும். காம ஆசைப்படும் பொருளை நாம் பெறமுடியாதபடி தடுப்பவரிலே எமக்கு வெகுளியுண்டாகின்றது. எமக்குப் புகழிலே ஆசையுளதாயின், அதைக் கெடுத்து எம்மை இகழ்வோரிலே வெகுளியுண்டாகும். எமது தோட்டப் பிரயோசனங்களிலே எமக்கு ஆசையுளதாயின், அதை அழிக்கும் விலங்குகளிலே வெகுளியுண்டாகும். காமம் இல்லையாயின் வெகுளியும் இல்லையாகும். மயக்கமாவது பொருளல்லாதவற்றைப் பொருளென்றெண்ணுதல். கடவுளுடைய பெருமை எம்முடைய மனத்தில் விளங்கும்போது பொருளல்லாதவைகளைப் பொருளாகமாட்டோம். ஆகவே, இறைவனுடைய பெருமையைச் சிந்தித்தலாலே தீவினைகள் யாவற்றினின்றும் நீங்குதல் கூடும். ஆயினும் இறைவனுடைய பெருமையை உள்ளபடி சிந்தித்தல் அரிது. எவ்வளவுக்கெவ்வளவு சிந்திக்கின்றோமோ அவ்வளவுக்குத் தீவினையினின்றும் நீங்கலாம் என்பது நிச்சயம்.

சைவ அநுட்டானத்திற்கு இன்றியமையாத இரண்டாவதுக் கூறு யாதெனில், அது இறைவனுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்தலாம். இது எத்தன்மைத்தெனில், இது ஆன்மாக்கள் யாவற்றையும் இறைவனைப்போலாக்குவது. 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரச்' செய்வது இது. இதற்கு மேலான பொருள் யாதுமில்லை. இதன் பெருமையை வீரவாகுதேவர் சூரனுக்கு வெகுசித்திரமாகத் தெருட்டியருளினார். பதினாயிரம் அடி நீளம், அவ்வளவு அடி அகல உயரங்களையுடைய பொன்மலை ஒன்று என்ன பெறுமதியென்று ஒருவர் கேட்டால் ஒரு தங்கப்பவுணைக் காட்டி இதன் விலை ஐம்பது ரூபா; ஒருகன அடி பொன்னில் எத்தனை தங்கப்பவுண் அடங்கும்; இந்தப் பொன்மலை எத்தனை கன அடிகொண்டது? இவைகளை அறிவாயானால் பொன்மலையின் பெறுமதியை அறிவாய்" என்பதே அதை விளக்க வேண்டிய முறை. வீரவாகுதேவரும் அவ்வாறாக அருட்பெருமையை விளக்குகின்றார். "பேதைப்ப, நீ உன்னை மிகப் பெரியவனென்றெண்ணுகிறாய். உனக்குள்ளவை [illegible] ஆயிரத்தெட்டு [illegible]

அண்டங்கள் யாவும் சேர்ந்தால் ஆயிரகோடியாகும். அவைகள் யாவற்றையும் அரசாளுபவன் உன்னிற் கோடிமடங்கு பெரியவனாவன். இந்தப் பிருதுவி அண்டங்களையும் அப்பு, தேயு, வாயு, ஆகாயமாகிய இவற்றுக்குரிய அண்டங்களையும் பிரகிருதி மாயையிலுள்ள எஞ்சிய பத்தொன்பது தத்துவங்களையும் சேர்ந்த அண்டங்களையும் அவற்றுக்கப்பாலுள்ள அசுத்த மாயையிலுள்ள ஏழு தத்துவங்களையும் சேர்ந்த அண்டங்களையும் அவற்றிற்கு மேலாயுள்ள சுத்தமாயையிலுள்ள அண்டங்களையும் ஒருவன் தனியரசு செய்வானாயின் அவனுடைய பெருமையை நீ அளக்கவேமாட்டாய். இவைகள் யாவற்றையும் அரசாளுகிறவன் யாவனென்று நீ கேட்டால், எனது தலைவராகிய கந்தசுவாமியாரது திருவருளிலே சிறிது பெற்றவன் அவன். அந்த அருளிலே சற்றே கூடப்பெற்றவர்கள் இவற்றைப் படைத்துக் காத்துக் காப்பவர்களாவர். இன்னுஞ் சற்றே கூடப்பெற்றவர்கள் இவற்றைப் பொருளென மதியாதவர்கள். அப்படியாயின் அத்திருவருள் எவ்வளவு பெரியதென்று [illegible]. அந்தத் திருவருளை நாம் சிந்திப்போமாயின் எமக்கு, "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" இத்தன்மைத்தாய திருவருளே எம்மை ஆளுவது. அதனுடைய ஆளுகைக்குக் கீழ் வாழும் எமக்குத் துன்பம் ஒருகாலமும் நேராது. எங்களுடைய தேசத்தை ஆளுகிறவர்கள் நல்லவர்களாயிருந்தால் நாங்கள் எவ்வளவு ஆனந்தமடைகிறோம். Lord Ripon என்பவர் இந்திய இராசப்பிரதிநிதியாயிருந்த போது (Viceroy) அவர் மிகவும் நல்லவராயிருந்ததினாலே இந்தியர்கள் இன்பமாய் வாழ்ந்தார்கள். திருவருள் எங்களை ஆளுவதால் எங்களுக்கு என்ன குறை! "திருவருளின் ஆளுகையிலே குறைகள் இருக்கின்றனவே" என்பர் சிலர். எத்தனை பேர் உணவின்றித் தவிக்கிறார்கள்; குட்டம் முதலிய பெருநோய்களால் வருந்துகின்றார்கள், தமக்குள்ள ஏழு ஆண் குழந்தைகளையும் சாகக் கொடுத்துத் தீராக் கவலையோடு மெலிகின்றார்கள்" என்பார்கள். இவைகள் குறைவுகளோ நிறைவுகளோ என்றறிவில் பெரிய சத்திர வைத்தியசாலையொன்றுக்குப் போவோம். அங்கே ஒருவனுடைய வயிற்றைக் கீறிக் குடலை எத்தனையோ விதமாகக் கிழிக்கிறார்கள். வயிற்றையும் குடலையும் வெட்டுவது குறைவை ஆக்குதற்கா? நிறைவை ஆக்குதற்கா? வேறொருவனுடைய காலை வெட்டி எறிகிறார்கள். வேறொருவனுடைய முதுகிலே கிண்ணம்போன்ற புண்ணொன்றிருக்கிறது, சில பாகங்களை வெட்டுகிறார்கள்; சில பாகங்களைக் கத்தரிக்கிறார்கள்; சில பாகங்களை உரிஞ்சுகிறார்கள்; கொடிய காரத்தை வைக்கிறார்கள். இவைகளெல்லாம் பெரும் துன்பத்தை ஆக்குவன. இவ்வாறு துன்பப்படுத்துதல் அவர்களுடைய குறைவுக்காகவா நிறைவுக்காகவா? ஆதலால் நாம் உணவின்றித் தவித்தாலும் பெருநோய்களால் வருந்தினாலும், அரிய புதல்வர்களை இழந்தாலும், இவைகள் யாவும் அத்திருவருளின் ஆணையால் வருதலால் எமக்கு நன்மையானவைகளேயன்றித் தீமையானவையல்ல. திருவருளைச் சிந்திப்போமாயின் இடர்கள்போல எமக்கு நேருவனவெல்லாம் நன்மையானவைகளேயென்ற உண்மை தோன்றும். அப்போது எது நேர்ந்தாலும் நித்தியானந்தத்தோடு வாழலாம். எமக்குப் பரபரப்பில்லை; கவலையில்லை; ஒருவிதமான மனச்சலனமுமில்லை. ஒரு குறைவுமில்லை; "என்றுமின்பம் தழைக்க இருக்கலாம்" (அப்பர் திருவேட்களப் பதிகம்) இறைவனது திருவருளை நாம் சிந்தித்து வருவோமாயின் அது எம்மிற் கலந்து எமது வழியாகப் பிற உயிர்களிற் செல்லும். மலையிலே விழுகின்ற பெருமழை மலையிலிருந்து அருவியாகப் பாய்ந்து பலவாயிரம் பயிர்களுக்கும் விலங்குகளுக்கும் மனிதருக்கும் சீவாதாரமாவதுபோல, திருவருள் தம்மைச் சிந்திப்பவர்களிலே பதிய அவர்கள் அந்த அருளைக்கொண்டு பிறவுயிர்களுக்கு நன்மை செய்வர். அருளாவது மலையருவிபோலக் கீழ்நோக்கிச் செல்வதன்றி மேல்நோக்கி எழுவதன்று. அது தாழ்ந்தோரிற் செல்லுமன்றி உயர்ந்தோரிற் செல்வதன்று. செல்வர்பால் செல்லாது நோயாளிகள்பாற் செல்வது. சுற்றமித்திரர்பாற் செல்லாது அயலார்பாற் செல்வது. அவ்வருளானது இனிய பார்வை, இனிய மொழி, இனிய செயல், இனிய சிந்தை எனப் பலவாறாக இனிமையைவிட்டு நீங்காது பாய்ச் செல்லும். எமது தமிழ் நூல்கள் அருளைப்பற்றிக் கூறுவன; எல்லையிலாதன. ஆங்கிலப் புலவர்களுள்ளே "சேக்ஸ்பியர்" எனப்படும் அருள் பெற்றவராதலால் அவ்வருளைப் பின்வருமாறு துதிக்கின்றனர்.

"It droppeth as the gentle rain from heaven
Upon the place beneath; it is twice blest;
It blesseth him that gives and him that takes."

சைவ அநுட்டானங்கள் யாவும் சரியை, கிரியை, யோகம் ஆகியமூன்றினுள் அடங்கும். ஒவ்வொரு படியிலும் நிற்போர் அவ்வப் படியிலுள்ள அநுட்டானங்களைச் சிரத்தையோடு நாடோறும் தவறாது செய்து வருவாராயின் அவற்றின் பயனாக ஒரு அநுபவ ஞானமுண்டாகும். அவைகள் முறையே சரியையில் ஞானம், கிரியையில் ஞானம், யோகத்தில் ஞானம், எனப்படும். இந்த ஞானம் கிடைக்குமாயின், சைவவாய்மைகள் நேரே அறியப்படும். அங்ஙனம் அறிபவர் புத்தகப்பூச்சியென்னும் நிலையைக் கடந்து ஏனையோர்க்கு உண்மையான சமய உபதேசஞ்செய்து அவர்களை வாழவைப்பர்; எவராலும் பெரியோராகக் கொள்ளப்படுவர். அப்படியானவர்கள் இன்றும் இந்தியாவிற் சிலர் உளர். இங்கும் சிலர் உளர்போலும். இத்தன்மையர் எமது நாட்டில் பெருகுதல் வேண்டும். இவர்கள் பெருகிவரும் காலமே சைவத்தின் பொற்காலமாம்.

"வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."

---

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 1, May, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org